


**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டு நாள் சுற்றுப்பயணமாக கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்குச் சென்றிருந்தார். நாமக்கல் மாவட்டத்தில் அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படத் தொகுப்பு...**




● நாமக்கல் மாவட்டத்திற்கு அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.




● நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார்.





● நாமக்கல்லில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 2,000 பயனாளிகளுக்கு ரூ 40 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி, முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தார்.






● நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.



● நாமக்கல் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் செயல்பட்டு வரும் SDAT மகளிர் விடுதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்து, மாணவிகள் விடுதியில் ஆய்வு மேற்கொண்டு, விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்.



● நாமக்கல் மாவட்டம், இராசிபுரத்தில் உள்ள அரசு கல்லூரி மாணவியர் விடுதிக்கு 'சமூக நீதி விடுதி' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. அதன் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தார்.